# மேனிலை இரண்டாமாண்டு

# பகுதி III - சிறப்புத்தமிழ்

## வினாத்தாள் மாதிரி

**Higher Secondary - Second Year**
**Part III - Tamil (Optional)**
**Sample Question Paper**


தயாரிப்பு

கேரள மாநிலக் கல்வியராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

திருவனந்தபுரம் - 12

# பாட ஏற்பாட்டு இலக்குகள்

- கருத்தரங்கு, சொற்பொழிவு, வாசிப்பு வாயிலாகப் பழந்தமிழக வரலாறு அறிதல். குறிப்புகள் தயார் செய்து கால வரிசைப்படி பட்டியலிடுதலும், கட்டுரையாக்குதலும்.
- நூலகத் தொடர்பு, களப்பணி போன்றவற்றின் வாயிலாகப் பழஞ்சேரநாட்டு வரலாறு, பண்பாடு, இலக்கியம் பற்றி அறிதல்; கட்டுரைகள் தயார் செய்து கருத்தரங்கில் வாசித்தல்.
- பல்லவர், பிற்காலச் சோழர், பிற்காலப் பண்டியர் ஆட்சியியல் பற்றி நூலகம், சொற் பொழிவு போன்றவற்றின் துணையோடு கட்டுரை தயார் செய்து கருத்தரங்குகளில் வாசித்தல். விவாதத்திற்குபின் கட்டுரையை மேம்படுத்தல்.
- விஜயநகர ஆட்சியும் வீழ்ச்சியும் பற்றிக் கலந்துரையாடிக் குறிப்புகள் தயாரித்தல்.
- ஆங்கிலேயே ஆட்சியும், விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்களிப்பும் பற்றி விவாதித்துக் குறிப்புகள் தயாரித்துக் கட்டுரை எழுதுதல்.
- விடுதலைக்குப்பின் தமிழக அரசியல், சமூகம், இலக்கியம் என்பன பற்றிக் கருத்தரங்கு போன்ற செயல்பாடுகளின் வாயிலாக அலசி ஆராய்தல். முக்கிய தகவல்களை முறைப் படுத்தித் தகுந்த படங்களோடு வெளியிடுதல்.
- பழந்தமிழ் இலக்கியம் பற்றிக் கலந்துரையாடல்/ நூலகத் தொடர்பு போன்றவற்றின் வாயிலாக் கருத்துகளைத் திரட்டுதல். கட்டுரை தயாரித்து மேம்படுத்தி வரலாற்று/ இலக்கியப் பத்திரிகைகளுக்கு அனுப்புதல்.
- பல்வேறு இலக்கிய வரலாற்று நூல்களின் வாயிலாகச் சங்க காலம், சங்கம் மருவிய காலச் சமூக நிலைகளை ஒப்பிட்டாய்ந்து கட்டுரை தயாரித்தல்; இலக்கிய மன்றங்களில் வாசித்தல்.
- பல்லவ, சோழ, நாயக்கர் கால இலக்கிய வளர்ச்சி, பண்பாட்டு நிலை பற்றிச் செயல் திட்டம்/ கலந்துரையாடல் போன்றவை வாயிலாகத் தகவல்களைத் தொகுத்துப் படித்தல்.
- ஐரோப்பியர் காலத்தில் ஏற்பட்ட இலக்கிய வளர்ச்சியைப் பற்றி விவாதித்தல்; குறிப்புகள் தயாரித்துப் பட்டியலிடுதல்.
- தற்கால இலக்கியப் போக்கு (பெண்ணியச் சிந்தனை, தலித் இலக்கியம், பின் நவீனத்துவ இலக்கியம் போல்வன) பற்றிச் சொற்பொழிவு, கருத்தரங்கு போன்றவற்றின் வாயிலாக அறிதல். குறிப்புகளைத் தொகுத்துக் கட்டுரை வடிவாக்கல்.
- நவீனத் தகவல் தொடர்புத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்திக் கலந்துரையாடல், குழுச் செயல்பாடுகள் போல்வன வாயிலாக அறிவியல் தமிழையும் ஊடகத்தமிழையும் மேம்படுத்துதல்.

www.StudyGuideIndia.com

- மொழி அமைப்பிற்குரிய அடிப்படை மரபுகளைக் கலந்துரையாடல், விவாதம், நூலகத் தொடர்பு வாயிலாக அறிதல், பயிற்சிகள் மேற்கொள்ளுதல், முடிவுகளை மேம்படுத்துதல் மற்றும் வெளியிடுதல்.
- பல்வேறு இலக்கியங்களை வாசித்து ஓசை வேறுபாடுகளை அறிதல். குறிப்புகள் தயாரித்துக் கருவிகளின் வாயிலாகப் பதிவு செய்து வெளியிடுதல்.
- இலக்கியங்களில் காணப்படும் அணி நயங்களை (உவமை, உருவகம், பின்வருநிலை, போல்வன) கண்டறிந்து நயங்களைச் சுவைத்துச் சொந்தப் படைப்புகள் வாயிலாக வெளியிடுதல்.
- சொல், பொருள் மரபுகளைப் பற்றிய அடிப்படைக் கருத்துகளை விவாதங்கள், குழுக் கலந்துரையாடல் போன்றவற்றின் வாயிலாக அறிதல்; இக்காலத்தோடு ஒப்பிடுதல்.
- பல்வேறு காலகட்டங்களில் தமிழ் வரிவடிவத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கண்டறிந்து கட்டுரைகள் எழுதுதல், இதழ்களில் வெளியிடுதல்.
- ஊடகங்களில் வெளியிடப்படும் கட்டுரைகள், செய்திகள், தலையங்கங்கள் போன்றவற்றை விவாதம், சிறப்புக் குழுக் கலந்துரையாடல் போன்றவற்றின் வாயிலாக மேம்படுத்துதல்; கட்டுரை வடிவாக்கல்.
- தமிழ் - மலையாள உறவைக் கலந்துரையாடல், குழுச் செயல்பாடுகள் போன்றவற்றின் வாயிலாக அலசி ஆராய்தலும் கட்டுரைகள் தயார் செய்தலும்.
- மொழித்தோற்றத்தோடு தொடர்புடைய பல்வேறு கருத்தாக்கங்கள் பற்றிக் கலந்துரையாடிக் கட்டுரை, சொற்பொழிவு, கேள்வியும் பதிலும் போன்றவற்றின் வாயிலாக வெளியிடல்.
- வெளியீடு தொடர்பான அனைத்துக் கூறுகளிலும் பொருந்தும் செயல்பாடுகள் வாயிலாக அறிந்து திறன் பெற்றுப் பள்ளியிதழ்கள் போல்வன தயார் செய்திடல்.
- பேச்சுக்கலையின் சிறப்புத் தன்மைகளைக் கலந்துரையாடல், நூல்வாசிப்பு போல்வன வாயிலாக அறிதலும் மேம்படுத்தலும். அத்துடன் அறைகளிலும் அரங்குகளிலும் வெளிப்படுத்தலும்.
- முக்கியமான இலக்கிப் படைப்பாளிகளின் வாழ்க்கையைச் சித்தரித்தல் போன்றவற்றைக் ஆவணப்படம், குறும்படம், கலந்துரையாடல், விவாதம், ஆகியவை வாயிலாகத் திட்டமிட்டுத் தயாரித்தலும் வெளியிடுதலும்.

❑❑❑❑❑

www.StudyGuideIndia.com

## I. Weightage to Cluster of Cos/ Content area (Unit)

| Sl.No | Cluster of COs/ Content area (Units) | No. of Questions | Score | Percentage % | Time Minutes |
|---|---|---|---|---|---|
| 1 | அலகு 1<br>தமிழக வரலாறும் பண்பாடும்- முற்காலம் | 2 | 11 | 13.75 | 25 |
| 2. | அலகு 2<br>தமிழக வரலாறும் பண்பாடும்-பிற்காலம் | 3 | 20 | 25 | 35 |
| 3 | அலகு 3<br>தமிழ் இலக்கிய வரலாறு | 1 | 8 | 10 | 10 |
| 4 | அலகு 4<br>மொழி அமைப்பும் அழகும் | 6 | 31 | 38.75 | 60 |
| 5 | அலகு 5<br>ஊடகமும் நவீன தகவல்தொழில்<br>நுட்பங்களும் | 2 | 10 | 12. 50 | 20 |
| | **மொத்தம்** | **14** | **80** | **100** | **150** |

Study

## II. Weightage to type of Questions

| Sl.No | Tpe of Question | No. of Questions | Score | Percentage % | Time Minutes |
|---|---|---|---|---|---|
| 1 | Objective Type | - | - | - | - |
| 2 | Short Answer | 10 | 54 | 67.5 | 10.5 |
| 3 | Essay | 2 | 16 | 20 | 25 |
| 4 | Others | 2 | 10 | 12.5 | 20 |
| | **Total** | **14** | **80** | **100** | **150** |

# BLUE PRINT

| Sl.No | Cluster of COs/ Content area (Units) | Objec-tive | Short Answer | Essay | Others | Total |
|---|---|---|---|---|---|---|
| 1 | அலகு -1<br>தமிழக வரலாறும் பண்பாடும் முற்காலம் | - | (11)<br>2 | - | - | (11)<br>2 |
| 2. | அலகு -2<br>தமிழக வரலாறும் பண்பாடும் பிற்காலம் | - | (12)<br>2 | (8)<br>1 | | (20)<br>3 |
| 3. | அலகு -3<br>தமிழ் இலக்கிய வரலாறு | - | 1 | (8)<br>1 | | (8)<br>1 |
| 4 | அலகு -4<br>மொழி அமைப்பும் அழகும் | - | (31)<br>6 | | | (31)<br>6 |
| 5 | அலகு -5<br>ஊடகமும் நவீன தகவல்<br>தொழில் நுட்பங்களும் | - | | | (10)<br>2 | (10)<br>2 |
| | **மொத்தம்** | | **(54)<br>10** | **(16)<br>2** | **(10)<br>2** | **(80)<br>14** |

www.St

# மேனிலை இரண்டாமாண்டு - பகுதி III - சிறப்புத்தமிழ்

## வினாத்தாள் மாதிரி

## HSE - Part - III - Tamil (Optional) Sample Question Paper

**வகுப்பு : 12**

மதிப்பெண் : 80

காலம் : 2.30 மணி

- *எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும்.*
- *ஒவ்வொரு வினாவுடன் தொடர்புடைய குறிப்புரைகளைப் படித்துப் புரிந்து கொண்ட பின்னரே விடை எழுத வேண்டும்.*
- *ஒவ்வொரு வினாவுக்குமுரிய மதிப்பெண் அந்தந்த வினாவுக்கு நேர் எதிரே கொடுக்கப்பட்டுள்ளது.*

www.StudiesToday.com

1. பண்டைத் தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகளைப் பட்டியலிடுக. தரப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தவும்

| தொல்பொருள் ஆய்வுச் சான்றுகள் | இலக்கியச் சான்றுகள் | வெளிநாட்டார் குறிப்புகள் |
|---|---|---|
| | | |

தஞ்சை பெரிய கோயில், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், சீனப்பயணியின் குறிப்புகள் கற்கருவிகள்

- தொல் பொருள் ஆய்வுச் சான்றுகள் பற்றிய சிறு குறிப்புத் தயாரிக்க.

6

2. குறிஞ்சி, முல்லை, மருதம் நெய்தல், பாலை இவை எந்தெந்த நிலத்தைச் சாரும் என்பதைக் குறிப்பிடுக.

(அ) குறிஞ்சி நில மக்கள் வாழ்க்கை பற்றி குறிப்பு தயாரிக்க.

(அ) முல்லை நில மக்களின் தொழில், தெய்வம் பறவை விலங்கு எவை என்பதைக் குறிப்பிக,

5

3. பொருத்தமான தொடர்களால் பட்டியலை நிரப்புக.

- வினைத் தொகை - ஊறுகாய், ............................................ ......................................
- பண்புத்தொகை - கருத்தரங்கு, ............................................ ......................................
- உம்மைத் தொகை - இரவுபகல், ...................................... ......................................
- உவமைத் தொகை - மதிமுகம், ...................................... ......................................
- ஒவ்வொன்றும் எவ்வாறு தொகைச் சொல் ஆயிற்று என்பதை விளக்குக.

5

---

4, ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு டைத்து.

இப்பாடலில் அமைந்த அணி எது? எழுதுக. அவ்வணியை விளக்குக.

3

---

5. அணியிலக்கணம், நந்திக்கலம்பகம் போன்றவை பல்லவர் காலத்திலும், சோழ மன்னரது காலத்தில் சிந்தாமணி, வளையாபதி போன்ற நூல்களும் தோன்றின. இவர்கள் காலத்தில் இலக்கிய வளர்ச்சி மிகுந்திருந்த தன் காரணத்தையும் இக்கால கட்டத்தில் தோன்றிய பிற நூல்களையும் குறிப்பிட்டுச் சிறுகட்டுரை வரைக.

8

---

6. ஆங்கிலேயர் காலத்தில் பெண்களின் நிலை வளர்ந்தது. அத்துடன் கல்வியும் கலையையும் வளர்த்தார்கள். அதற்கான காரணங்களைத் தருக.

6

---

7. • “அரிய மஞ்சினோடஞ்சன முதலிவை யதிகம்
கரிய காண்டலுங் கண்ணினீர் கடல் புகக் கலுழ்வாள்
உரிய காதலி னொருவரொ கூருவரை உலகில்
பிரிவெனுந்துயர் உருவு கொண்டாலன்ன பிணியாள்”

பொருளள்

| |
|---|
| அரக்கியர் கூட்டத்தினரிடையே இருந்த சீதைமை, மேகம் போன்ற கரிய பொருள்களைக் காணும் போதெல்லாம் இராமனின் நினைவு வர கண்ணீர் கடலினுள் சென்று சேரும்படி மிகுதியாக அழுதாள் |

இப்பாடலில் அமைந்துள்ள அணி எது? இவ்வணியை விளக்கி இப்பாடலுடன் பொருத்திக் காட்டுக.

5

---

www.StudyGuidemia.com

8. இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர்களைத் தொழிலிலிருந்து விலக்கும் சட்டம் இருந்த போதிலும் குழந்தைகள் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டே இருக்கிறார்கள். இப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையிலும் அரசின் கவனத்திற்குமாக நாளிதழ் ஒன்றுக்குத் தலையங்கம் தயாரிக்க.

6

---

9

*நேர் நேர் நேர் நேர் நேர் நிரை நேர் நேர் நிரை நேர்*
- கற் / றார் முன் / கல் / வி உரைத் / தல் மிக / இனி / தே

*நேர் நேர் நேர் நேர் நேர் நிரை நேர் நேர் நேர் நிரை நேர்*
- மிக் / கா / ரைச் சேர் / தல் மிக / மா / ண முன் / இனி / தே

*நேர் நிரை நேர் நேர் நிரை நேர் நேர் நேர் நேர் நேர்*
- எட் / டுணை / யா / னும் இர / வா / து தான் / ஈ / தல்

*நேர் நிரை நேர் நேர் நேர்*
- எத் / துணை / யும் ஆற் / றல் இனி / து.

- வெண்பாவின் இறதி ஆடி மூச்சீர்களாகவும் ஏனைய அடிகள் நாற்சீர்களாகவும் வரும். இயற்சீரும் வெண்சீரும் பயின்று வரும்.
- இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வரும்.
- ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றைப் பெற்று முடியும்.
- செப்பலோசை உடையது.
- இரண்டடி முதல் 12 அடிவரை வரும்
- ஒரு விகற்பமாகவோ பல விகற்பமாகவோ வரும்

தரப்பட்டுள்ள பாடலோடு இவ்விதியைப் பொருத்திக்காட்டுக.

6

---

10. பல்லவர் காலம் பக்தியிலக்கியக் காலம் என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஒன்று தயாரிக்க. கீழ்க்காணும் குறிப்புகளையும் பயன்படுத்துக.

- சோழப் பேரரசின் தலைநகராகத் தஞ்சை விளங்கியது.
- சோழர் காலத்தில் கிராம ஆட்சி சிறந்து விளங்கிறது.
- கிராம சபைகளே மக்களாட்சியில் பெரும் பங்கு கொண்டன.
- கோயில்களை மையமாகக் கொண்டு தனி சபைகள் இருந்தன.
- குடவோலை முறைப்படி தேர்தல் நடத்திக் கிராம அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.
- கோயில்கள் மக்கள் வாழ்வில் முக்கிய இடம் பெற்றன.

6

---

www.StudyGuideIndia.com

11. கீழ்வரும் சொற்களைப் பிரித்து அவை என்ன புணர்ச்சி என எழுதுக.

- மரக்கிளை. படப்பெட்டி. ஆட்டுக்கால். வாழைப்பழம். பூமாலை. மரவேர்

6

---

12. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று இது

(குறிஞ்சிப்பாட்டு ; ஏலாதி ; மதுரைக்காஞ்சி ; குறுந்தொகை )

(அ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பற்றிய குறிப்பு தாயரிக்க.

(ஆ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சங்கம் மருவிய காலத்தில் தோன்றியதன் காரணத்தை ஆய்க.

8

---

13. ரண்டாழ்ச்சக்கு முன்பு இஸ்ராயேல் லெபனனில் துடங்ஙிய ஆக்கிறமணம் அத்தியந்தம் ஆபத்கரமாய கட்டத்திலெத்தியரிக்குந்நு. தெக்கன் லெபனனில் யு. என் சமாதான தௌத்தியத்தின்றெ பாகமாயுள்ள இந்தியன் தாவளத்தில் இஸ்ரயேல் சென நடத்திய வியோமாக்கிற மணத்தில் நாலு நிரீஷகர் மரிக்குகயும் ஒரு இந்தியன் சைனிகனு பரிக்கேல்க்குகயும் செய்து, கன்னட, சைனா, ஒஸ்டிரியா, பின்லான்ட் எந்நீ ராஜ்ஜியக் காராணு மரிச்சதெந்நாணு லெபனனிலெ சமாதான சேனயுடெ வக்தாவு பறஞ்ஞுது. தகர்ந்த தாவளத்தில் ரக்ஷா பிறவர்த்தனம் நடத்தும் போழும் இஸ்ராயேல் விமானங்ஙள் ஆக்கிறமணம் நடத்தி சம்பவத்தெ யூரோப்பியன் யூணியனும் இதர ராஜ்யங்ஙளும் சக்தமாயி அபலபிச்சிட்டுண்டு.

28-7-2006 அன்று ‘மாதிர் பூமி’ நாளிதழில் தலையங்கமாக வந்த செய்தி தரப்பட்டுள்ளது. இத்தலையங்கத்தை தமிழ் மொழியில் மொழி பெயர்க்கவும்.

4

---

14. பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்து வழங்கி வருகிறது. தரப்பட்டுள்ள வாக்கியங்களில் பிறமொழிச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களை அமைத்து வாக்கியங்களை சரியாக எழுதுக.

- பஸ் பாஸ்டா போகிறது.
- ஆஸ்பத்திரி கேட்டில் நின்றான்
- பஜாரில் கூட்டம் ஜாஸ்தி
- போலீஸ் ஸ்டேஷன் ஊரின் சென்டரில் இருக்கிறது.
- பந்துமித்திரர் சகிதம் வந்து ஆசீர்வதிக்கக் கோருகிறோம்.

6

---

# மதிப்பீட்டுக்குறிப்புகள்

# Scoring Key

| வினா எண் | மதிப்பீட்டுக் குறிப்புகள் | மதிப்பெண் பங்கீடு | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|
| 1. | பட்டியல் | 3 | |
| | குறிப்பு | 2 | |
| | மொழி நடை | 1 | 6 |
| 2 | நிலப்பிரிவுகள் | 2 | |
| | கருத்து | 2 | |
| | பெயர்கள் வரிசை | 1 | 5 |
| 3 | பட்டியல் வரிசை | 2 | |
| | விளக்கம் | 3 | 5 |
| 4 | உவமை அணி | 1 | |
| | விளக்கம் | 2 | 3 |
| 5 | நூல்கள் | 2 | |
| | கருத்து | 3 | |
| | அமைப்பு | 1 | |
| | மொழி நடை | 2 | 8 |
| 6 | காரணங்கள் | 3 | |
| | கருத்து | 2 | |
| | மொழி நடை | 1 | 6 |
| 7 | அணியின் பெயர் | 1 | |
| | பாடல் பொருத்தம் | 4 | 5 |
| 8 | தலைப்பு | 1 | |
| | கருத்து | 4 | |
| | மொழி நடை | 1 | 6 |
| 9 | பொருத்தம் | 3 | |
| | விளக்கம் | 3 | 6 |

| | | | |
|---|---|---|---|
| 10 | கருத்து<br>அமைப்பு<br>மொழி நடை | 3<br>2<br>1 | <br><br>6 |
| 11 | பிரித்து எழுதுதல்<br>பொருத்திக் காட்டல்<br>மொழி நடை | 2<br>3<br>1 | <br><br>6 |
| 12 | மிகக் குறுகிய விடை<br>கருத்துகள்<br>காரண காரியத்தொடர்பு<br>மொழி நடை | 1<br>3<br>3<br>1 | <br><br><br>8 |
| 13 | மொழிபெயர்ப்பு<br>மொழி நடை | 3<br>1 | <br>4 |
| 14 | சொல் தேர்வு<br>வாக்கிய அமைப்பு | 3<br>3 | <br>6 |

www.StudyGuid

## Question wise Analysis

| Qu. No. | Cluster of COs/ Content area (Units) | Mental Process | Type of Qun. | Score | Time |
|---|---|---|---|---|---|
| 1 | அலகு -1<br>தமிழக வரலாறும் பண்பாடும்<br>- முற்காலம் | • நினைவு கூர்தல்<br>• திரும்பக்கூறல்<br>• வகைப்படுத்தல் / ஒருங்கிணைத்தல் | SA | 6 | 15 |
| 2. | அலகு -1<br>தமிழக வரலாறும் பண்பாடும்<br>- பிற்காலம் | • நினைவு கூர்தல் திரும்பக்கூறல்<br>• காரண காரியத்தோடு தொடர்புபடுத்தல் | SA | 5 | 15 |
| 3. | அலகு -4<br>மொழி அமைப்பும் அழகும் | • நினைவு கூர்தல் திரும்பக்கூறல்<br>• முன்னறிவுடன் தொடர்புபடுத்துதல்<br>• வகைப்படுத்தல் / ஒருங்கிணைத்தல் | SA | 5 | 10 |
| 4 | அலகு -4<br>மொழி அமைப்பும் அழகும் | • நினைவு கூர்தல் திரும்பக்கூறல்<br>• புதிய சூழ்நிலையில் பயன்படுத்துதல் | SA | 3 | 10 |
| 5 | அலகு -2<br>தமிழக வரலாறும் பண்பாடும் | • நினைவு கூர்தல் திரும்பக்கூறல்<br>• காரண காரியத்தோடு தொடர்புபடுத்தல்<br>• பெற்ற அறிவுகளை கற்பனைத் திறனோடு வெளியிடல் | Essay | 8 | 15 |
| 6 | அலகு -2<br>தமிழக வரலாறும் பண்பாடும் | • நினைவு கூர்தல் திரும்பக்கூறல்<br>• காரண காரியத்தோடு தொடர்புபடுத்துதல் | SA | 6 | 10 |
| 7 | அலகு -4<br>மொழி அமைப்பும் அழகும் | • நினைவு கூர்தல் திரும்பக்கூறுதல்<br>• முன்னறிவுடன் தொடர்ப்புப்படுத்தி அலசி ஆராய்தல் | SA | 5 | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | அலகு - 5<br>ஊடகமும் நவீனத் தகவல் தொழில் நுட்பங்களும் | • நினைவுகூர்தல் திரும்பக்கூறுதல்<br>• புதிய சூழ்நிலைகளில் பயன்படுத்துதல் | SA | 6 | 10 |
| 9. | அலகு - 4<br>மொழி அமைப்பும் அழகும் | • நினைவுகூர்தல் திரும்பக்கூறுதல்<br>• காரணகாரியத்தோடு தொடர்புப்படுத்துதல்<br>• முன்னறிவுடன் தொடர்புப் படுத்தி அலசி ஆராய்தல் | SA | 6 | 10 |
| 10. | அலகு - 2<br>தமிழக வரலாறும் பண்பாடும் - பிற்காலம் | • நினைவுகூர்தல் திரும்பக்கூறுதல்<br>• முன்அனுபவங்களோடு தொடர்புப்படுத்தி அடிப்படைக்கருத்துகளை உருவாக்குதல்<br>• மதிப்பிடுதலும் முடிவு களைக்காணுதலும் | SA | 6 | 10 |
| 11. | அலகு - 4<br>மொழி அமைப்பும் அழகும் | • நினைவுகூர்தல் திரும்பக்கூறுதல்<br>• முன்னறிவுடன் தொடர்புப் படுத்தி அலசி ஆராய்தல் | SA | 6 | 10 |
| 12. | அலகு - 3<br>தமிழ் இலக்கிய வரலாறு | • நினைவுகூர்தல் திரும்பக்கூறுதல்<br>• காரணகாரியத்தோடு தொடர்புப்படுத்துதல்<br>• முன்னறிவுடன் தொடர்புப் படுத்தி அலசி ஆராய்தல் | Essay | 8 | 10 |
| 13 | அலகு -<br>ஊடகமும் நவீனத் தகவல் தொழில் நுட்பங்களும் | • புதிய சூழ்நிலைகளில் பயன்படுத்துதல்<br>• காரணகாரியத்தோடு தொடர்புப்படுத்துதல் | Others | 4 | 10 |
| 14 | அலகு - 4<br>மொழி அமைப்பும் அழகும் | • நினைவுகூர்தல் திரும்பக்கூறுதல்<br>• ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிதல் | SA | 6 | 10 |

❑❑❑❑❑